**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | E.P. No.<br>E.A. No. | : | **5/2014**<br>**10/2025** |
| | | P/W's | : | **PW2** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | செல்வகுமார் | CASTE | : | |
| S/O | கரியமால் (லேட்) | RELIGION | : | இந்து |
| VILLAGE | சோழவந்தான் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **43** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.02.2026**

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. நான் B.Sc வரை படித்துள்ளேன். தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். நான் சாட்சி அளிக்க வருமாறு அழைப்பாணை எதுவும் வரவில்லை. 1ம் மனுதாரர் அழைத்ததால் வந்தேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதுதான். எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முந்தைய வழக்குகளில் நான் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்குகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் யார் யார்மீது தாக்கல் செய்தது என்று தெரியாது என்றாலும் சரிதான். மனுதாரர்கள் எனது உறவினர்கள் கிடையாது, பக்கத்து வீட்டுக்காரர்கள்.

2. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தேதிகள் பற்றி 1ம் மனுதாரர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். எனக்கு இந்த மனுபற்றியும் நேரடியாக தெரியாது என்றாலும் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் 1ம் மனுதாரர் சொல்லி தயார் செய்யப்பட்டதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.